***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 189/2015 – P.W. 4 (LW 7)***

| | |
|---|---|
| *Name* | சுப்ரியா - காவல் ஆய்வாளர்<br>திருவாரூர் நகர காவல்நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்பொழுது திருவாரூர்நகர காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 12.07.2015 அன்று மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நெடுஞ்சாலை ரோந்து பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. புலித்தேவன் என்பவர் இம்ரான்கான் மற்றும் முருகன் ஆகிய நபர்களுடன் ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் ரப்பர் ஸ்டாம்ப்-2 , இருசக்கர வாகனம்-1 ஆகியவற்றுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று மன்னார்குடி நகர காவல்நிலையக்குற்ற எண்.701/2015 இதச பிரிவுகள் 465, 468, 471,472,484 ,420 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார் .**

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** இந்த வழக்கில் ரப்பர் ஸ்டாம்ப், சான்றிதழ் ஆகியவற்றை தனியறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றுடன் புகார்தாரர் வழங்கவில்லை என்றால் புகாருடன் ஆவணங்களை சேர்த்து ஒப்படைத்தார். இரவு 12.30 மணி என்பது இரவா? அதிகாலையா? என்றால் தேதி மாறி விட்டால் அடுத்தநாள்தான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவ காலக்கட்டத்தின்போது நகர காவல்நிலையம் இந்த நீதிமன்றத்தில் இருந்து 50 மீட்டர் துாரத்தில் தான் இருந்தது என்று சொன்னால்சரிதான். இந்த வழக்கில் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு 21 . 1/2 மணி நேரம் காலதாமதமாக வந்ததற்கான சிறப்புக்காரணம் ஏதும் உண்டா? என்றால் இல்லை. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் என்னிடம் புகார் கொடுக்கவில்லை என்றாலும், புகார்தாரர் எங்களது துறையைச்சேர்ந்தவர் என்பதாலும் காவல்நிலையத்திலேயே வைத்து பின் யோசனை செய்து கொடுக்கப்பட்ட ஒரு காலதாமதமான புகாரின் பேரில் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவல அறிக்கை பதிவு செய்த பிறகு கோப்புகளை ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பித்த பின்பு இந்த வழக்கில் எந்த விதத்திலும் எனக்கு தொடர்பில்லை என்று சொன்னால் சரிதான். 12.07.2015 க்கு பிறகு எந்த வகையிலும் புலன் விசாரணையில் எனது பங்கு இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் எண். 91 22.07.2015 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டது என்றால் Re-Submit செய்துள்ளேன்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi